## இராணிப்பேட்டை நகராட்சி

## 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் – 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

### தலைமை :– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 22.11.2019 | **பொருள் எண்.3323**<br>அரசாணை எண் (MS):150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 19.11.2019–ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 20.11.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.07.2018–ன்படி 01.04.2018 ஆம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்துவரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rates) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017 ஆம் தேதி முதல் சொத்துவரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும், நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br>1) அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1945/2018/அ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.3323 பதிவு செய்யப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| 22.11.2019 | **<u>பொருள் எண்.3324</u>**<br><br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வருகின்ற 28.11.2019 அன்று இராணிப்பேட்டை புதிய மாவட்டம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற உள்ளது. மேற்படி, விழாவினை முன்னிட்டு விழாவில் பங்கேற்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் நலன் கருதி தற்காலிக கழிவறைகள், தற்காலிக சிறுநீர் கழிவறைகள் அமைத்தல் மற்றும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் அமைத்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்தல் போன்றப் பணிகளை மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.15,00,000/–க்கு (ரூபாய் பதினைந்து இலட்சங்கள்) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதின் "Leithris Flush," No.1508, Trichy Road, Coimbatore – 641 018 என்கிற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்றுத் தற்காலிக கழிவறைகள் மற்றும் தற்காலிக சிறுநீர் கழிவறைகள் அமைத்திடும் பணிக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் குடிநீர் வசதி செய்திடும் பணிக்கு விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த பட்ச விலைப்புள்ளி அளிக்கப்பட்டவரின் மூலமாக மேற்படி குடிநீர் வசதி செய்திடும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**<u>(ந.க.எண். 2877/2019/இ1)</u>** | நகரமன்ற<br>தீர்மானம் எண்.3324<br>அனுமதி<br>வழங்கப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| | **2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் – 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்** | |
| 29.11.2019 | **பொருள் எண். 3325**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | நகரமன்ற<br>தீர்மானம் எண்.3325<br>அங்கீகரிக்கப்பட்டது |
| 29.11.2019 | **பொருள் எண்.3326**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்ற<br>தீர்மானம் எண்.3326<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2019 | **பொருள் எண்.3327**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN73C6265 எண்ணுள்ள ஈப்பு வண்டியில் பழுது ஏற்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் ஆணையர் அவர்களின் அன்றாட அலுவலக பணிகள் தடைபடும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்திடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை JAIN CARS வேலூர் என்கிற நிறுவனம் மூலம் சரி செய்திடவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | நகரமன்ற<br>தீர்மானம் எண்.3327<br>அலுவலகக் குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2768/2019/இ1)** | |
| 29.11.2019 | **<u>பொருள் எண்.3328</u>**<br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.11.2019 அன்று இராணிப்பேட்டை புதிய மாவட்டம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெறுவதை முன்னிட்டு மேற்படி விழா நிகழ்ச்சியினை தினசரி நாளிதழ்களில் இந்நகராட்சி மூலம் விளம்பரம் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி இராணிப்பேட்டை புதிய மாவட்ட துவக்க விழா நிகழ்ச்சியினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சிப் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2881/2019/இ1)** | நகரமன்ற தீர்மானம் எண்.3328 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2019 | **<u>பொருள் எண்.3329</u>**<br>இந்நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2019–20 –ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். அ2/407/2019 நாள் 09.11.2019–ல் நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>பணியின் பெயர்</u>**<br>வார்டு எண். 29, பாறைத் தெரு, பாறைத் தெரு சந்து, காயிதே மில்லத் மற்றும் பஜனை கோயில் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல்.<br>மதிப்பீடு ரூ. 8,00,000/– | நகரமன்ற தீர்மானம் எண்.3329 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2796/2019/இ1)** | |
| 29.11.2019 | <u>பொருள் எண்.3330</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட இடிபாடு கழிவுகளை ஒழுங்குப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் இடிபாடு கழிவுகள் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, கட்டட இடிபாடு கழிவுகளை கட்டட உரிமையாளர்கள் மற்றும் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் சாலைகளிலும் தெருக்களிலும் கொட்டக்கூடாது என்றும் அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றம் என்றும் சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த செலவிலும் பொறுப்பிலும் முறைப்படி அகற்றிக்கொள்ள வேண்டும் என்றும் உரிய கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனத்தின் மூலம் அகற்றப்படும் என்றும் மேற்படி கட்டட இடிபாடு கழிவுகளை கொட்டுவதற்கு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30–வது வார்டு மஹாவீர் நகரில் நகராட்சிக்குச் சொந்தமான காலியிடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தின் கட்டட இடிபாடு கழிவுகளை கொட்டுமாறு தெரிவித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்யவும் மேற்படி அறிவிப்பு கடிதத்தினை தமிழ் தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.10,000/–த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) அவசர அவசியம் கருதி நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுமக்களுக்கான அறிவிப்பு கடிதம் செய்தித்தாளில் விளம்பரம் செய்தமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.10,000/– இந்நகராட்சிப் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் .1741/2019/எச்1 )** | நகரமன்ற தீர்மானம் எண்.3330 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2019 | <u>பொருள் எண்.3331</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN73/Q9747 எண் கொண்ட வாகனத்தின் காப்பீடு முடிந்துவிட்டபடியால் 2019–2020 அடுத்த ஓர் ஆண்டு காலத்திற்கு புதுப்பிக்கவும், அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.46,111/–திற்க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்.3331 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.46,111/– இந்நகராட்சிப் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் .2725/2019/எச்1)** | |
| 29.11.2019 | <u>பொருள் எண்.3332</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான லாரி நிறுத்துமிடம் கடை எண். 3,5 மற்றும் அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண். 11,12,13 ஆகிய கடையின் குத்தகைதாரர்கள் தொடர்ந்து கடை வாடகை நிலுவை வைத்துள்ளதால், வருவாய் ஆய்வாளர் 25.10.2019 தேதிய குறிப்பில் மேற்கண்ட கடைகள்பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதால் பொதுஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி கடைகளை மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பிற்கு கடையின் குத்தகைதாரர் மீது நீதிமன்றம் மூலம் வழக்கு தொடுத்து நிலுவைத் தொகையினை வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. திரு.டீக்காராமன் லாரி நிறுத்துமிடம் கடை எண்.3 ரூ. 160096/–<br>2. திரு.டீக்காராமன் லாரி நிறுத்துமிடம் கடை எண்.5 ரூ. 160096/–<br>3. திரு.சி.பாபு அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண்.11 ரூ. 22741/–<br>4. திரு.சி.பாபு அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண்.12 ரூ. 22741/–<br>5. திரு.சி.பாபு அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண்.13 ரூ. 22741/–<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்குறிப்பிட்டுள்ள 5 குத்தகைதாரர்களின் நிலுவைத் தொகையினை வசூல் செய்யவும் மற்றும் மறு ஏலம் விடுவதினால் ஏற்படும் இழப்பிற்கு நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரவும் மன்றம்அனுமதிக்கலாம். | நகரமன்ற தீர்மானம் எண்.3332 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

ஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.